பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 05 சனிக்கிழமை 21.08.2021 கதிர் 154

## ஊரடங்கு வேளையில் குடும்பஸ்தர் கொலை!

குருநாகல் மாவட்டம், பொத்துஹெர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்டோம்புவ பிரதேசத்தில் குடும்பஸ்தர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. ☞2

## சுகாதார நடைமுறைகளுடன் சந்நிதியான் தேர்த் திருவிழா

(எஸ்.நிதர்ஷன்)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற யாழ்., வடமராட்சி தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மகோற்சவ தேர்த் திருவிழா இன்று நடைபெற்றது.

விசேட பூஜை ஆராதனைகள் இடம்பெற்று ஆலய உள்வீதியில் தேர் வலம் வந்தது.

நாடு பூராகவும் ஊரடங்கு அமுல் படுத்தப்பட்டுள்ள நிலையில் ☞2



## வவுனியாவில் எகிறும் தொற்று; மேலும் 150 பேருக்கு கொரோனா

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் மேலும் 150 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாற்றாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளின் முடிவுகள் ☞2

# உண்மையை மூடி மறைப்பது மாபெரும் அரசியல் சூழ்ச்சி!

## உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கு நீதி கோரி நாடு முழுவதும் இன்று கறுப்புக் கொடி போராட்டம்






**இலங்கையில் கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கு நீதி கோரி நாடு முழுவதும் இன்று கறுப்புக் கொடி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

**உயிர்த்த ஞாயிறு தினத் தற்கொலைத் தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள்** ☞2

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 186 பேர் கைது!

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 186 பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதற்கமைய, தனிமைப் படுத்தல் சட்டம் அமுலுக்கு வந்த கடந்த ஒக்டோபரிலிருந்து இது வரையில் 55 ஆயிரத்து ☞2

## ஜனாதிபதியே! திமிர் வேண்டாம்!!

### கத்தோலிக்க திருச்சபையின் கடிதத்துக்குத் தெளிவாகப் பதிலளி; நீர்கொழும்பில் மூவின மக்களும் இன்று கவனவீர்ப்புப் போராட்டம்

நீர்கொழும்பில் வாழும் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கு எதிராகவும், அதற்கு நீதி கோரியும் இன்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கைகத்தோலிக்கதிருச்சபைஅனுப்பியகடிதத்துக்குத் தெளிவாகப் பதிலளிக்க வேண்டும் எனவும், தாக்குதலின் பின்னணியில் உள்ளவர்களை வெளிப்படுத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்க வேண்டும் எனவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் போராட்டக்காரர்கள் இதன்போது கோரிக்கை விடுத்தனர். ☞2




## யாழ். கோண்டாவிலில் பூப்புனித நீராட்டு விழாவில் பங்கேற்ற 21 பேருக்குக் கொரோனாத் தொற்று!

யாழ்., நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கோண்டாவில் எம். எஸ். லேன் பகுதியில் நடைபெற்ற பூப்புனித நீராட்டு விழாவில் கலந்துகொண்ட 21பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற இந்த விழாவில் பங்கேற்ற சிலருக்குக் கொரோனாத் ☞2

## முடக்க நிலையில் வீதிகளில் நடமாடியவர்களை வழிமறித்து வவுனியாவில் அன்டிஜன் சோதனை

### இருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி

(வவுனியா நிருபர்)

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக நாடு முழுவதும் முடக்கப்பட்டுள்ள நிலையில் வீதிகளில் நடமாடியவர்களை வழிமறித்து வவுனியா சுகாதாரப் பிரிவினர் இன்றுமேற்கொண்டஅன்டிஜன் பரிசோதனையில்இருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்றிரவு 10 மணி முதல் எதிர்வரும் 30 ஆம் திகதி அதிகாலை 4 மணிவரை நாடு முழுவதும் முடக்க நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதனை மீறி செயற்படுபவர்கள் மீது பொலிஸாரும், ☞2

## இம்முறை 5,000 ரூபா 'அவுட்' 2,000 ரூபாவே கொடுப்பனவு

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு எதிர்வரும் திங்கட்கிழமை முதல் 2 ஆயிரம் ரூபா நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்படும் என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. ☞2

## தனிமைப்படுத்தல்...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
842 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, நேற்றிரவு 10 மணிக்கு முன்னர் மேல் மாகாண எல்லைப்பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 12 சோதனைச் சாவடிகளில் மேல் மாகாணங்களில் இருந்து வெளியேறிய 735 வாகனங்களும் 1,261 நபர்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அவ்வாறே மேல் மாகாணத்துக்குப் பிரவேசித்த 787 வாகனங்களும், 1,437 நபர்களும் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

அதன்போது. மாகாணங்களுக்கு இடையிலான பயணக்கட்டுப்பாட்டை மீறி மேல் மாகாணத்துக்குள் பிரவேசிக்க முயன்ற 191 வாகனங்கள் மற்றும் 471 நபர்கள் திருப்பியனுப்பப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## வவுனியாவில்...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சில நேற்றிரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்றுப் பரவல் அடைந்துள்ள நிலையில் 150 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பிவைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களை சுய தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, வவுனியாவில் கடந்த சில நாள்களாக கொரோனாத் தொற்றாளர்களின் நாளாந்த எண்ணிக்கை 100 இற்கும் அதிகமாக சடுதியாக அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பூப்புனித...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொற்று அறிகுறிகள் தென்பட்டதையடுத்து அதில் கலந்துகொண்ட 58 பேருக்கு அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அவர்களிலேயே 21 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று பரவலையடுத்து ஒன்றுகூடல்களைத் தவிர்க்கும் வகையில் அரசு விடுத்துள்ள அறிவுறுத்தல்களையும் மீறி இடம்பெற்ற குறித்த பூப்புனித நீராட்டு விழாவில் அளவுக்கதிகமானவர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## முடக்க...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சுகாதாரப் பிரிவினரும் இணைந்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

அந்தவகையில், வவுனியா நகரப் பகுதிகளில் சுகாதாரப் பிரிவினரும், பொலிஸாரும் இணைந்து விசேட கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டமையுடன், வீதியில் நடமாடியவர்களை வழிமறித்து அன்டிஜன் பரிசோதனையும் முன்னெடுத்திருந்தனர். இதனை மாவட்ட பதில் அரச அதிபர் தி.திரேஸ்குமார் நேரடியாக விஜயம் செய்து கண்காணித்தார்.

வவுனியா நீதிமன்றம் மற்றும் ரயில் நிலைய வீதி என்பவற்றில் சைக்கிள், மோட்டர் சைக்கிள் மற்றும் வாகனங்களில் நடமாடியவர்கள் வழிமறிக்கப்பட்டு 30 பேருக்கு அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. அதில் இருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

தொற்று உறுதி செய்யப்பட்டவர்களைக் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஏனையவர்கள் சுகாதாரப் பிரிவினராலும், பொலிஸாராலும் எச்சரிக்கப்பாட்டு வீடுகளுக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டனர். (100)

## உண்மையை...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குறித்து அரசு அதன் பொறுப்புக்கூறலையும் கடமைகளையும் உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்றும், இல்லையேல் சர்வதேசத்தை நாடுவோம் என்றும் பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தொடர்ச்சியாக எச்சரிக்கை விடுத்து வருகின்றார்.

அத்துடன் இந்தத் தாக்குதலுக்கு நீதியை வலியுறுத்தும் விதமாக வீடுகள், வர்த்தக நிலையங்கள், வணக்கஸ்தலங் கள் என்பவற்றில் இன்று கறுப்புக் கொடி ஏற்றுமாறு கத்தோலிக்க திருச்சபை கேட்டுக்கொண்டிருந்தது.

அதற்கமைய பொதுமக்கள் இன்று வீடுகளிலும், வர்த்தக நிலையங்களிலும், வணக்கஸ்தலங்களிலும் கறுப்புக் கொடிகளை ஏற்றினர்.

இதேவேளை, உண்மையை மூடி மறைப்பது மாபெரும் அரசியல் சூழ்ச்சி; உண்மையைக் கண்டறிய ஒன்றிணைவோம் என்று வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகள் கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தின் வாசற்பகுதியில் இன்று வைக்கப்பட்டிருந்தது. தேவாலயத்தில் இன்று விசேட பிரார்த்தனையும் இடம்பெற்றது.

இன்று நடைபெற்ற இந்தக் கறுப்புக் கொடி போராட்டம் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விவகாரம் தொடர்பாக நாட்டு மக்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளது என்று கத்தோலிக்க திருச்சபை தெரிவித்துள்ளது.

## இம்முறை...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொரோனாவின் முதலாவது மற்றும் இரண்டாவது அலைகளின்போது நாடு முடக்கப்பட்டவேளைகளில் நிவாரணக் கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. எனினும், இம்முறை 2 ஆயிரம் ரூபாவே வழங்கப்படவுள்ளது.

## ஊரடங்கு...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தியடோர்வத்த, கல்டொம்புவ பிரதேசத்தைச் சேர்ந்த நபரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுள்ளமையுடன் அவர் மீது கல்வீச்சுத் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாக்குதலுக்குள்ளான நபர் படுகாயங்களுடன் குருநாகல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தனிப்பட்ட பகையே இந்தத் தாக்குதலுக்குக் காரணம் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் என்றசந்தேகத்தின்பேரில் பெண்ணொருவர் உட்பட இருவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொத்துஹெர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஜனாதிபதியே!...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
'ஜனாதிபதியே! திமிர் வேண்டாம்!!' என்று வாசகம் எழுதப்பட்ட பதாதையையும் அவர்கள் தாங்கியிருந்தனர்.

## சுகாதார...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சுகாதார அமைச்சால் ஆலயங்களுக்கு என வெளியிடப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மட்டுப்படுத்தப்பட்ட அடியார்களுடன் தேர் உற்சவம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.






# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் -onlinekathir.com

## கோட்டாவின் நீலிக்கண்ணீர்

நாட்டை முடக்குவது தொடர்பாக நாட்டு மக்களுக்கு நேற்றிரவு உரையாற்றிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பேச்சில் குறிப்பிட்டவை, தன்னுடைய கருத்தில் அவர் உண்மையாக உள்ளாரா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தி இருப்பது கவனிக்கத்தக்கது.

அந்த உரையை நோக்குபவர்கள் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளின் பெயரினால் நாட்டின் ஆடை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி தொழில் பாதிக்கப்படுவது பேரிழப்பாகும் என்று அவர் வலியுறுத்திச் சுட்டிக்காட்டி இருக்கின்றமையைக் கவனிக்க முடியும். அதில் அவர் உண்மையாக இருக்கிறாரா என்பதுதான் பிரதான கேள்வியாகும்.

"கொரோனா முதலாவது அலை ஏற்பட்ட காலப்பகுதியில் இலங்கைக்கு சுமார் 500 கோடி அமெரிக்க டொலர்களை (சுமார் ஒரு லட்சம் கோடி ரூபாவை) வருமானம் ஈட்டித் தந்த ஆடைத் தொழில் துறை மிகப் பெரிய நட்டத்தை எதிர்கொண்டது. அவர்களுக்கான ஏற்றுமதிக் கட்டளைகள் இடை நிறுத்தப்பட்டன. இதனால் பலருக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் போனது. ஏற்றுமதி வருமானம் இழப்பு ஏற்பட்டது" – என்று பிரபலாபித்தார் ஜனாதிபதி கோட்டாபய.

"மீண்டும் ஒரு தடவை முற்றாக முடக்கினால் இந்த நாடு பாரிய பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும். அது இந்த நாடு பொறுத்துக் கொள்ளக்கூடிய சூழ்நிலையே அல்ல. விசேடமாக, ஏற்றுமதி தொழில்துறையில் ஈடுபட்டிருக்கும் தொழில்துறை பாரிய அளவு ஏற்றுமதிக் கட்டளைகளைப் பெற்றுள்ளது. அந்த கட்டளைகளை உரிய நேரத்தில் – காலத்தில் – வழங்க முடியாது போனால் பாரிய அந்நிய செலாவணியை நாம் இழக்க வேண்டி வரும்." – இப்படிக் கவலையும் விசனமும் தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய.

இந்தக் கவலையும் விசனமும் உண்மையானவையா, அவரின் அடி மனதில் இருந்து வந்த கருத்துக்கள்தானா என்ற கேள்விதான் இப்போது எழுப்பப்படுகின்றது.

அவர் கூறுவது போல இத்தனை வருமானத்தை ஈட்டித் தரக்கூடிய ஒரு துறை பாதிக்கப்படுமானால் அது நாட்டுக்குப் பெரும் பின்னடைவுதான். ஆனால் அத்தகைய இழப்பு பற்றி உண்மையில் இந்த நாட்டின் தலைவருக்கு கவலை – சிரத்தை – கரிசனை – ஆதங்கம் எல்லாம் இருக்கின்றனவா என்பதுதான் கேள்வி.

இலங்கையில் ஆடை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி தொழில் தாக்குப்பிடித்து நிற்பதற்கும் நாட்டுக்குப் பல்லாயிரம் கோடி ரூபாவை அந்நிய செலாவணியாக வாரி வழங்கிக் கொட்டி நிற்பதற்கும் பிரதான – ஒரே – காரணம் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் நமக்கு வழங்கியுள்ள வரிச்சலுகை வாய்ப்புதான். இந்த ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை கிட்டுவதால் மட்டுமே நமது நாட்டின் இந்த ஏற்றுமதித் துறையால் உலகின் மற்ற நாடுகளுடன் போட்டி போட்டு நிமிர்ந்து நின்று இந்தத் துறையில் தாக்குப்பிடிக்க முடிகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கவலைப்படுகின்ற மாதிரி ஆடை உற்பத்தி, ஏற்றுமதி தொழில் அழிந்துவிடாமல் தாக்குப்பிடித்து நின்று, நாட்டுக்கு அந்நிய செலாவணியை ஈட்டித் தருவது தடைப்படாது தொடர வேண்டுமானால் முதலில் இந்த ஜி.எஸ்.பி. வரிச் சலுகை முறைமை நீடிக்க வேண்டும். ஜி.எஸ்.பி. வரிச்சலுகை நீக்கப்பட்டால் நாட்டின் ஆடை உற்பத்தியும் ஏற்றுமதியும் அடியோடு படுத்து விடும். ஆடை உற்பத்தி தொழிற்சாலைகளை இழுத்து மூட வேண்டி நேரும். சுமார் மூன்று லட்சம் ஊழியர்களுக்கு – அதுவும் எழுபது வீதம் பெண்களுக்கு – வேலை வாய்ப்பளித்து அவர்களின் அன்றாட வாழ்வாதாரத்துக்கு மையக் களனாக விளங்கும் தொழில்துறை நிரந்தரமாக மூடுவிழா கண்டுவிடும். 2010 முதல் 2017 வரையான காலத்தில் அதுதான் நடந்தது.

இன்று கொரோனாத் தடுப்பு நடவடிக்கையினால் அந்தத் தொழில்துறை படுத்து விடக்கூடாது என்று பெரிதும் அலட்டிக் கொள்ளும் கோட்டாபய ராஜபக்ஷ, தமது அரசின் பௌத்த, சிங்களப் பேரினவாத நிலைப்பாட்டின் வெளிப்பாடான மோசமான மனித உரிமை மீறல் போக்கினால் அந்த வரிச் சலுகையை – ஏற்றுமதிச் சலுகையை – நிரந்தரமாக பறிகொடுத்து, மீண்டும் 2010 – 2017 நிலைமையை போன்ற ஒன்று ஏற்பட்டுவிடும் என்பதை உணரவில்லையா? கொரோனாத் தடுப்பு நடவடிக்கையால் இந்தத் தொழில்துறை பாதிக்கப்படக்கூடாது என நீலிக்கண்ணீர் வடிக்கும் அவர் தமது அரசின் பேரினவாத போக்கால் அந்த வரிச்சலுகை பறிபோய், அது அந்தத் தொழில்துறைக்கு நிரந்தர சமாதி கட்டப் போகின்றது என்பதை அறியாமலா இப்படிப் பேசுகிறார்?

# டெல்டாவை தவிர்க்கும் வகையில் மக்களின் செயற்பாடுகள் வேண்டும்

### மன்னார் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் கோரிக்கை



'டெல்டா' தொற்று தாக்கம் செலுத்துவதை தவிர்த்துக் கொள்ளும் வகையில் மக்கள் செயற்பட வேண்டும் என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.விநோதன் தெரிவித்துள்ளார்.

நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்தியர் த.விநோதன் மேலும் கூறியுள்ளவை வருமாறு–

நாட்டில் இடம்பெற்று வரும் கொரோனா மரண வீதத்துடன் ஒப்பிடும்போது மன்னாரில் குறைவாக காணப்பட்டாலும் எமது மரண வீதம் அதிகரித்து செல்வதையே காட்டுகிறது.

ஆகவே மக்கள், சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகக் கடைப்பிடித்து செயற்பட வேண்டும்.

மேலும் நோய் அறிகுறிகள் காணப்பட்டால் மக்கள் அச்சம் கொள்ளாமல், அருகில் உள்ள வைத்தியசாலை, சுகாதார வைத்திய அதிகாரி அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆகியோருக்கு அறிவித்து, தங்களுக்கான சிகிச்சைகளை பெற்றுக் கொள்ள முடியும்.

மன்னார் மாவட்ட மக்கள் தற்போது சுகாதார வழிமுறைகளை கடைப்பிடிப்பதில் முன்னேற்றம் காணப்பட்டாலும் கூட கூடுதலான அவதானத்தை இன்னும் செலுத்த வேண்டும்.

அப்போதுதான், நாடு முழுவதும் பரவுகின்ற 'டெல்டா தொற்று' மன்னார் மாவட்டத்தில் தாக்கம் செலுத்துவதை தவிர்த்துக் கொள்ள முடியும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இராணுவத்தால் யாழில் குருதிக் கொடை நிகழ்வு



கொரோனா அச்சுறுத்தலான காலப்பகுதியில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய யாழ்.மாவட்ட இராணுவத்தினரால் குருதி வழங்கும் நிகழ்வு, நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில், யாழ்.மாவட்ட கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் கொடிதுவக்கு தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்நிகழ்வில், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 200 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கலந்து கொண்டு குருதியை வழங்கினர்.

இந்த குருதியை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளை போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் எஸ்.சிறிபவானந்தராஜா முன்னெடுத்திருந்தார். குறித்த நிகழ்வில் யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதி, வைத்திய அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# அதிபர் மற்றும் ஆசிரியர்களின் சம்பள விவகாரம்; நிதியமைச்சிடம் நேற்று அறிக்கை சமர்ப்பிப்பு



அதிபர் மற்றும் ஆசிரியர்களின் சம்பள விவகாரம் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதற்காக அமைச்சரவை உப குழுவால் தொகுக்கப்பட்ட முன்மொழிவுகள் அடங்கிய அறிக்கை, நிதியமைச்சில் நேற்று (வெள்ளிக்கிழமை) சமர்ப்பிக்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை, அதிபர் மற்றும் ஆசிரியர் தொழிற்சங்கங்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் சாதகமான முன்மொழிவுகளைப் பரிசீலித்ததாக அமைச்சரவை உப குழுவின் உறுப்பினர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்நிலையிலேயே நேற்றைய தினம், நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம் குறித்த அறிக்கையை சமர்ப்பிக்கப்பட்டதாக அமைச்சரவை உப குழு தெரிவித்துள்ளது.

மேலும், எதிர்வரும் வாரம், அமைச்சரவைக் கூட்டத்தில், இந்த அறிக்கையை தாக்கல் செய்யவுள்ளதாகவும் அமைச்சரவை உப குழு கூறியுள்ளது.

# நாட்டை முடக்கியமை நியாயமற்றது சுயதொழிலாளர்கள் சங்கம் காட்டம்

தற்போதைய நிலையில் நாட்டை முடக்குவது நியாயமற்றது என சுயதொழிலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், நாடு முடக்கப்பட்டுள்ளதால் பாதிக்கப்பட்டுள்ள 65 லட்சம் சுய தொழிலாளர்கள் குறித்து அரசாங்கம் முடிவெடுக்க வேண்டும் என அந்த சங்கத்தின் தலைவர் மஹிந்த கஹந்தகம தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆளுநர்கள் மற்றும் பொது ஊழியர்களின் பாதி சம்பளத்தை திறைசேரிக்கு வழங்கி, அதனை சுயதொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும் என்று அவர் முன்மொழிந்துள்ளார்.

இல்லையென்றால், இந்த முடக்கப்பட்ட காலப்பகுதியில் யாருக்கும் கொடுப்பனவுகள் வழங்க வேண்டாம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டை மூடக் கோருபவர்களுக்கு நாடு முடங்கியிருக்கும் போது சுயதொழிலை நம்பி வாழும் மக்களின் வாழ்வாதரத்துக்கு வழி கூற வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# அஷ்ரப் கனியின் சகோதரர் தலிபான்களுக்கு ஆதரவு

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறியமையைத் தொடர்ந்து, அங்கு தலிபான் தீவிரவாதிகளுக்கும், அந்நாட்டு அரசுக்கும் இடையிலான போரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தலிபான் கள் தலைநகர் காபூலை கைப்பற் றினர்.

இதனால் 20 ஆண்டுகளுக்கு பின்னர் ஆப்கானிஸ்தான் மீண்டும் தலிபான்கள் வசமானது. இதைத் தொடர்ந்து அந்த நாட்டின் அதிபர் அஷ்ரப் கனி தனது பதவியை ராஜினாமா செய்து விட்டு நாட்டை விட்டு குடும்பத்துடன் தப்பி ஓடினார். அமீரகத்தில் அவர் தஞ்சம் அடைந்து இருக்கின்றமை தெரியவந்துள்ளது.

இந்நிலையில், முன்னாள் அதிபர் அஷ்ரப் கனியின் சகோதரர் ஹஷ்மத் கனி அகமதுசாய், தலிபான்களின் தலைவர் கலீல்-உர்-ரஹ்மான் மற்றும் மதத் தலைவர் முஃப்தி மஹ்மூத் ஜாகிர் முன்னிலையில் ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் தலைமையிலான புதிய ஆட்சிக்கு தனது ஆதரவை தெரிவித்துள்ளார்.



## தேவைப்பட்டால் தலிபான்களுடன் இணைந்து செயல்படத் தயார்

### இங்.பிரதமர் போரிஸ் ஜான்சன்

ஆப்கானிஸ்தானில் ஆட்சி அதிகாரத்தை தலிபான்கள் கைப்பற்றியுள்ளனர். தங்கள் அரசை உலக நாடுகள் அங்கீகரிக்க வேண்டும் என்று தலிபான்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். பாகிஸ்தான், சீனா உள்ளிட்ட நாடுகள் தலிபான்கள் அரசை அங்கீகரிப்பதாக அறிவித்துள்ளன.

அதேவேளையில், பிற முன்னணி உலக நாடுகள் இவ்விவகாரத்தில் இன்னும் எந்த முடிவையும் அறிவிக்கவில்லை. தலிபான்களை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று கனடா அறிவித்துள்ளது. இந்த நிலையில், தேவையேற்பட்டால் தலிபான்கள் அரசுடன் இணைந்து செயல்படத் தயார் என்று இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன் தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தானில் பெண்களுக்கு எதிரான கொடுமைகள் தொடர்ந்தும் அதிகரிப்பு

பாகிஸ்தானில் பெண்களுக்கு எதிரான கொடுமை சமீப நாள்களாக அதிகரித்து வருகிறது. பாகிஸ்தான் சுதந்திர தினம் கடந்த 14ஆம் திகதி கொண்டாடப்பட்டது. பாகிஸ்தானைச் சேர்ந்த பெண் டிக்டாக்கில் பிரபலம். அவர் விதவிதமாக வீடியோக்களை டிக்டாக்கில் வெளியிடுவது வழக்கம் என்பதனால் ஏராளமான பின்தொடர்பவர்கள் உள்ளனர். அந்த கொண்டாட்டத்தை படம்பிடிப்பதற்காக, தனது நண்பர்கள் 6 பேருடன் மினார் பாகிஸ்தான் பகுதிக்குச் சென்றிருந்தார்.

லாகூரின் இக்பால் பார்க் அருகே வந்தபோது, நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் அவர்களை சூழ்ந்து கொண்டு பின் விரட்டினர். இதனால் செய்வதறியாது திகைத்த டிக்டாக் பிரபலம் தப்பிக்க ஓடினார். ஆனால், அந்த கும்பலில் சிலர் அவர் உடைகளை கிழித்தும் அங்கும் இங்குமாக தள்ளியும் தரதரவென இழுத்தும் மேலே தூக்கியும் வீசினர். இருந்தாலும் அதில் இருந்த சிலர், அந்தப் பெண்ணை காப்பாற்ற முயன்றனர். ஆனால், அவர்களாலும் முடியவில்லை.



இதனை சிலர் வீடியோவாக எடுத்து சமூக வலைதளங்களில் வெளியிட்டனர். இது வைரலானதை அடுத்து பலர் கடும் கண்டனங்களை தெரிவித்து வருகின்றனர். இந்த சம்பவத்திற்கு பாகிஸ்தான் அரசியல்வாதிகள் மற்றும் பிரபலங்களும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

400 பேர் கொண்ட கும்பல் தன்னையும், தன் நண்பர்களையும் கடுமையாக தாக்கி, உடைகளை கிழித்து இழுத்துச் சென்று, அணிந்திருந்த நகைகளையும் நண்பரின் தொலைபேசி, ரூ.15 ஆயிரத்தை பறித்துக் கொண்டனர் என்றும் அந்த டிக்டாக் பிரபலம் லாகூர் லாரிஅட்டா பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். லாகூர் டி.ஐ.ஜி. சஜித் கிய்வானி இதுகுறித்த விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த பரபரப்பு அடங்குவதற்குள் மற்றொரு சம்பவம் பற்றிய வீடியோ வெளிவந்து அதிர்ச்சி ஏற்படுத்தி உள்ளது. அதில், பரபரப்பு நிறைந்த சாலையில் திறந்த நிலையிலான ரிக்ஷா ஒன்றில் அதில் 2 பெண்கள் நடுவே குழந்தை ஒன்றை வைத்துக் கொண்டு அமர்ந்துள்ளனர். அதனையொட்டி மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்த நபர் திடீரென ரிக்ஷாவில் தொற்றி கொண்டமையால் அந்தப் பெண்கள் அதிர்ச்சி அடைந்தனர். அந்த நபர் ஒரு பெண்ணின் கன்னத்தில் முத்தமிடுகிறார்.

இதனால் அந்தப் பெண்கள் அலறி கூச்சலிட்டபோதும் யாரும் கண்டு கொள்ளவில்லை. ஆத்திரத்தில் பெண்களில் ஒருவர் செருப்பு ஒன்றை கழற்றி மோட்டார் சைக்கிளில் வந்தவர்களை அடிக்க முற்படுகிறார். ஒரு கட்டத்தில் பாதிக்கப்பட்ட பெண் ரிக்ஷாவில் இருந்து இறங்கி செல்ல முற்பட்டபோது அருகேயிருந்த மற்றொரு பெண் அவரை தடுத்து அமர வைக்கிறார். அந்த ரிக்ஷாவை சுற்றி கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் என ஆண்கள் பலர் சூழ்ந்து கொள்கின்றனர். அவர்களின் கைகளில் தேசிய கொடியும் காணப்பட்டது.

இந்த வீடியோ சமூக வலைதளங்களில் பரவி, அதிர்ச்சி ஏற்படுத்தி உள்ளது. பாலியல் துன்புறுத்தல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பலர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.







# ஆப்கானிஸ்தானில் இருந்து மேலும் 85 இந்தியர்கள் மீட்பு

ஆப்கானிஸ்தானின், காபூலிலிருந்துமேலும் 85 இந்தியர்கள் மீட்கப்பட்டுள்ளனர். ஆப்கான் நாட்டை தற்போது தலிபான்கள் ஆக்கிரமித்து தங்களுடைய கட்டுப்பாட்டில் கொண்டு வந்த நிலையில் அந்நாட்டில் இருந்து ஏராளமானோர் வெளியேறி வருகின்றனர். அந்த வகையில் இந்தியாவும் அங்கிருக்கும் இந்தியர்களை நாட்டிற்கு கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

தலிபான்கள் வசம் உள்ள ஆப்கானிஸ்தானின் காபூலில் இருந்து மேலும் 85 இந்தியர்கள் மீட்கப்பட்டுள்ளனர். இந்திய விமானப்படை சி-130ஜே மூலம் 85 பேரும் தாயகம் திரும்பியுள்ளனர் என தகவல்கள் கூறுகின்றன.





# மேகதாது அணைக்கு எதிராக போராட்டம் நேற்று பிரேமலதா தலைமையில் நடந்தது

காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது என்ற பகுதியில் கர்நாடக மாநில அரசு அணை கட்டும் முயற்சியை கண்டித்து தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் சார்பில் தமிழக எல்லை நகரான ஓசூரில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அணை கட்டும் முயற்சியை தடுத்து நிறுத்தக் கோரி மத்திய அரசை வலியுறுத்தும் வகையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் அக்கட்சியின் பொருளாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் தலைமையில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

ஓசூர் ராம் நகர் அண்ணா சிலை முன்பு நடைபெற்றஆர்ப்பாட்டத்தின் போது, உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக சட்டத்திற்கு புறம்பாகவும் காவிரியின் குறுக்கே மேகதாது என்ற இடத்தில் கர்நாடக மாநில அரசு அணை கட்டும் முயற்சிக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் கர்நாடக மாநில அரசை எதிர்த்து முழக்கங்கள் எழுப்பப்பட்டன. அதேபோல இந்த அணை கட்டும் திட்டத்திற்கு அனுமதி மறுத்து அணை கட்ட முயற்சிக்கும் முயற்சியை முறியடிக்க வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினார்கள்.

முன்னதாக இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க ஓசூர் கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் இருந்து ஒரு கிலோமீற்றர் தூரம் சிறிய ரக டிராக்டரைத் தானே செலுத்தி வந்து பிரேமலதா விஜயகாந்த் கலந்துகொண்டனர்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய பிரேமலதா விஜயகாந்த், மத்தியிலும் கர்நாடக மாநிலத்திலும் ஆட்சி செய்துவரும் பி.ஜே.பி. அரசு தமிழகத்திற்கு விரோதமாக அணை கட்டியே தீருவோம் என்ற முடிவை வன்மையாக கண்டிக்கிறோம். இரு மாநிலத்தவரும் சகோதரத்துவத்துடன் பழகி வரும் நிலையில் பிடிவாதப் போக்கை கர்நாடக அரசு கைவிட வேண்டும், இல்லை என்றால் தமிழக மக்களின் எதிர்ப்புக்கு கர்நாடக மாநிலம் ஆளாக நேரிடும் என எச்சரிக்கை விடுத்தார்.

# தாஜ்மஹாலைப் பார்வையிட இரவில் மீண்டும் அனுமதி

உலகின் 7 அதிசயங்களில் ஒன்றாக விளங்கும் வரலாற்றுக் காதல்சின்னமான தாஜ்மஹாலை இரவிலும் ரசிக்க இன்று முதல் மீண்டும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

உத்தரப் பிரதேச மாநிலம் ஆக்ரா நகரின் யமுனை நதிக் கரையோரம் அமைந்துள்ளது தாஜ்மஹால். முகலாய அரசர் ஷாஜகானால் பளிங்குக் கற்களால் கட்டப்பட்ட காதல் நினைவுச் சின்னமான தாஜ்மஹாலை இரவு நேரத்தில் நிலவொளியில் காண்பது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். இதை ரசிக்க தினமும் ஏராளமானோர் வருவது வழமையாயினும் கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக 2020 மார்ச் 17 இலிலிருந்து இரவு நேரத்தில் பார்வையாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுவந்தது.



கொரோனாத் தொற்று பரவலாகக் குறைந்துவரும் நிலையில் இன்று முதல் இரவு நேரத்தில் மூன்று பகுதிகளாக தாஜ்மஹாலைக் காண பொது மக்கள் அனுமதிக்கப்படுவர் என ஆக்ரா தொல்லியல் துறை அறிவித்துள்ளது. இது குறித்து, ஆக்ரா தொல்லியல் துறைக் கண்காணிப்பாளர் வசந்த்குமார் ஸ்வரன்கர், தாஜ்மஹாலை இரவில் ரசிக்க இம்மாதம் 21, 23, 24 ஆகிய திகதிகளில் பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இரவு 8:30 - 9:00, 9:00 - 9:30, மற்றும் 9:30 -10:00 மணி வரை என மூன்று பிரிவுகளில் அனுமதி வழங்கப்படும் என்று விவரம் வழங்கியுள்ளார்.

மேலும் ஒவ்வொரு பிரிவிலும், தலா 50 பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவர். இதற்கான அனுமதிச் சீட்டுகளை ஆக்ரா மால் சாலையில் உள்ள தொல்லியல் துறை அலுவலகத்தில் முன்பதிவு செய்து கொள்ளலாம். வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பார்வையாளர்களுக்கு அனுமதி கிடையாது என்றும் தெரிவித்திருக்கிறார்.

# ராகுல் காந்தியின் பதிவினை டுவிட்டரையடுத்து பேஸ்புக், இன்ஸ்டகிராம் தளங்களும் நீக்கின



காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ராகுல் காந்தியின் பதிவினை பேஸ்புக் மற்றும் இன்ஸ்டகிராம் தளங்கள் நீக்கியுள்ளன.

முன்னதாக டுவிட்டர் தளம் அவரது பதிவை நீக்கியிருந்தமை மாத்திரமல்லாது அவரது கணக்கையும் முடக்கியிருந்தது.

தலைநகர் டெல்லியில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளான ஒன்பது வயது பட்டியலினத்தைச் சேர்ந்த சிறுமியின் பெற்றோர்களின் படத்தை ராகுல் காந்தி தனது சமூக வலைத்தள பக்கத்தில் பகிர்ந்திருந்தார்.

அந்தப் பதிவில் ராகுல் காந்தி பதிவு செய்திருந்த விடயம், தங்களது கொள்கையை மீறிய காரணத்தினால் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக பேஸ்புக் மற்றும் இன்ஸ்டகிராம் தளங்களின் தரப்பில் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

# 2024 நாடாளுமன்ற தேர்தலுக்கான திட்டமிடுதலுக்கு எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு சோனியா அழைப்பு

2024ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலை இலக்காகக் கொண்டு அதற்கான திட்டமிடுதலை தற்போதே தொடங்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு காங்கிரஸ் இடைக்காலத் தலைவர் சோனியா காந்தி அழைப்பு விடுத்துள்ளார்.

சோனியா காந்தி தலைமையில் எதிர்க்கட்சித் தலைவர்களின் ஆலோசனைக் கூட்டம் காணொலி வாயிலாக நடைபெற்றது. இதில் உரையாற்றிய சோனியா, சுதந்திர இந்தியாவின் மதிப்புகள் மற்றும் கொள்கைகளில் நம்பிக்கை கொண்ட ஒரு அரசை நம் நாட்டிற்கு வழங்கிட வேண்டும் என்ற ஒற்றை எண்ணத்துடன் கூடிய திட்டத்தை தற்போதே தொடங்கிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இது மிகப்பெரிய சவால் என்றபோதிலும், ஒன்றாக இணைந்து பணியாற்றுவதற்கு இதைவிட மாற்று இல்லை என்று அவர் குறிப்பிட்டார். நமக்கு வெவ்வேறு கட்டாயங்கள் இருந்தாலும் அவற்றையெல்லாம் கடந்து நாட்டின் நலனுக்காக ஒன்று சேரும் நேரம் வந்துவிட்டது என்று சோனியா தெரிவித்தார்.

கடந்த நாடாளுமன்ற கூட்டத்தொடரில் எதிர்க்கட்சிகள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஒன்றாக இணைந்து செயல்பட்டமையை அவர் சுட்டிக்காட்டினார். இதர பிற்படுத்தப்பட்டோர் பிரேரணை விடயத்தில்,



3 ஆண்டுகளுக்கு முன்பு அரசு செய்த தவறை திருத்த வைத்தோம் என்று அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற இரு அவைகளிலும் தொடர்ந்த இந்த ஒற்றுமை வருங்காலத்திலும் நாடாளுமன்றத்துக்கு வெளியே நடத்த வேண்டிய போராட்டத்திலும் தொடரும் என நம்புகிறேன் எனவும் சோனியா காந்தி தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில், தி.மு.க. தலைவரும் தமிழக முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின், வி.சி.க. தலைவர் திருமாவளவன் மற்றும் முதலமைச்சர்கள் மம்தா பானர்ஜி, உத்தவ் தாக்கரே, ஹேமந்த் சோரன், தேசிய வாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார், இடதுசாரித் தலைவர்கள் டி.ராஜா, சீதாராம் யெச்சூரி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



# காங்கிரஸ் மீது மக்களுக்கு நம்பிக்கையில்லை பா.ஜ.கவின் எம்.பி. அனில் பலூனி கருத்து

2024 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் ஒருங்கிணைந்து செயல்படுவது தொடர்பாக சோனியா காந்தி தலைமையில் எதிர்க்கட்சிகள் நடத்திய ஆலோசனைக் கூட்டம் தொடர்பாக பா.ஜ.கவின் செய்தித்தொடர்பாளரும் எம்.பியுமான அனில் பலூனி இவ்வாறு கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

காங்கிரஸ் கட்சிக்கு தன் மீது நம்பிக்கை இல்லாததால் கூட்டணி தேடுவதுதான் நல்லது என்றும், காங்கிரஸின் உடைந்த ஊன்றுகோலைப் பயன்படுத்த இப்போது யாரும் ஆர்வம் காட்டவில்லை என்றும் அவர் விமர்சித்திருக்கிறார். காங்கிரஸின் எதிர்காலம் இருண்டுவிட்டதாகவும் காங்கிரஸை மக்கள் நிராகரித்துவிட்டனர் எனவும், அதன் மீதான நம்பிக்கையை இழந்துவிட்டனர் எனவும் அனில் பலூனி தெரிவித்தார். நாட்டை முன்னேற்றம் மற்றும் வளர்ச்சிப் பாதையில் கொண்டு சென்று பிரதமர் மோடி மக்களின் நம்பிக்கையை பெற்றிருக்கிறார் என்றும் அனில் பலூனி கூறியிருக்கிறார்

# அம்பாறை மாவட்டம் முற்றாக முடங்கியது



நாடளாவிய ரீதியில் நேற்று நள்ளிரவு முதல் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் அம்பாறை மாவட்டத்திலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு பிரதேசங்கள் யாவும் வெறிச்சோடிக் காணப்பட்ட நிலையில் மருந்தகம் மற்றும் சதொச நிலையங்கள் உள்ளிட்ட சில அத்தியாவசிய சேவை நிலையங்கள் மாத்திரம் திறந்துள்ளன.

அக்கரைப்பற்று மத்திய சந்தைப் பிரதேசத்திலும் அனைத்து வியாபார நிலையங்களும் மூடப்பட்டுள்ளமையுடன் இராணுவத்தினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

இராணுவத்தினர் வீதிச்சோதனை நடவடிக்கையினை முன்னெடுத்துள்ள நிலையில் வெளியில் நடமாடுகின்றவர்களை பரிசோதனைக்குட்படுத்தி வருகின்றனர். உரிய காரணமின்றி நடமாடுகின்றவர்களை எச்சரிக்கை செய்து வீடுகளுக்கு அனுப்பியும் வருகின்றனர்.

இதேநேரம் பிரதேச செயலகம் ஊடாக மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய சேவை வழங்கும் விடயங்கள் தொடர்பிலும் பிரதேச செயலக செயலாளர் வி.பபாகரன் உள்ளிட்ட அதிகாரிகளினால் முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையிலும் ஆலையடிவேம்பு பிரதேசத்தில் கொரோனாத் தொற்று அதிகரித்துவருவதாகவும் மக்கள் பொறுப்புடன் நடந்து கொண்டு தொற்றிலிருந்து மீண்டு வர ஒத்துழைப்பை வழங்குமாறும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.அகிலன் தெரிவித்தார்.

## பெரியகல்லாறு இலங்கை வங்கி 4 ஆம் திகதி வரை தற்காலிகமாக பூட்டு



பெரியகல்லாறு இலங்கை வங்கியில் பாதுகாப்பு உத்தியோகத்தராக கடமை பரியும் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமையால் வங்கி நடவடிக்கைகள் யாவும் எதிர்வரும் 4 ஆம் திகதி வரை தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளன.


பெரியகல்லாறு கிராமத்திலுள்ள இலங்கைவங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றில் கடமைபுரியும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் 15 பேருக்கு எழுமாற்றாக அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட போது அதில் இலங்கை வங்கியில் கடமை புரியும் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியிருந்தார்.

இவ் வங்கியில் கடமை புரியும் கல்முனையைச் சேர்ந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் நேற்று கொரோனாத் தொற்றுக்குள்ளானதுடன் இன்று மேலும்ஒருவர்தொற்றுக்குள்ளாகியுள்ளார்.

இதேவேளை, பெரியகல்லாற்றில் அமைந்துள்ள தேசிய சேமிப்பு வங்கியில் கடமை பரியும் முகாமையாளர் ஒருவர் கடந்தவாரம் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியிருந்தார்.

இதனையடுத்து குறித்த வங்கியின் நடவடிக்கைகளும் 14 நாள்களுக்கு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காட்டு யானை தாக்கி ஒருவர் சாவு



மட்டக்களப்பு மாவட்டத்தில் செங்கலடி – பதுளை வீதியின் காயாங்குடா சந்தியை அண்மித்த பிரதேசத்தில் காட்டுயானை தாக்கியதில் பண்ணையாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இன்று அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

தம்பானம்வெளி கொடுவாமடு பிரதேசத்தைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான 44 வயதுடைய தங்கராசா சிறிராஜஜெயம் என்பவரே கொல்லப்பட்டவரென அடையாளங்காணப்பட்டுள்ளது.

இவர் துவிச்சக்கரவண்டியில் வந்து பற்றைக்காட்டிற்கருகில் சிறுநீர்கழிக்கச் சென்றவேளையில் அங்கு மறைந்திருந்த யானைதாக்கியிருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது.

இவர் நேற்று வெள்ளிக்கிழமை மாலை வீட்டி லிருந்து புறப்பட்டுச்சென்று காயான்குடாவிலுள்ள தனது குடும்ப உறவினரது வீட்டில் தங்கியிருந்துள்ளார்.

அதையடுத்து செங்கலடி பகுதியிலுள்ள ஒருவரிடம் மாடுகளை விற்பனை செய்த பணத்தைப் பெறுவதற்காக இன்று அதிகாலைவேளை செங்கலடி பிரதே சத்தை நோக்கிச்சென்றவேளை இச்சம் பவம் இடம்பெற்றுள்ளது.

திடீர் மரணவிசாரணையதிகாரி எம்.எஸ்.எம். நஸிர் சம்பவ இடத்திற்கு நேரடியாகச்சென்று பார்வையிட்டு விசாரணைகளை ஆரம்பித்தார். அதன்பின்னர் பி.சி.ஆர். மற்றும் உடற்கூறு பரிசோதனைகளுக்காக சடலம் மட்டக்களப்பு போதனாவைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டது.

கரடியனாறு பொலிஸார் இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



## நுகர்வோர் அதிகார சபையினால் அம்பாறையில் தீடீர் சுற்றிவளைப்பு

அம்பாறை மாவட்ட நுகர்வோர் அதிகார சபையினால் கல்முனை மாநகர எல்லையினுள் உள்ள பல வர்த்தக நிலையங்கள் மீது திடீர் சுற்றிவளைப்பு நேற்று மேற் கொள்ளப்பட்டது.

பொருள்களை விற்பனை செய்யும் போது நுகர்வோருக்கு நிபந்தனை விதிப்பது, மேலதிக கட்டணங்கள் அறவிடுவது, பொருள்களை பதுக்கி வைப்பது தொடர்பாக பொது மக்களினால் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றமையை அடுத்து,அம்பாறை மாவட்ட நுகர்வோர் அதிகார சபையினரால் குறித்த தீடீர் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது வியாபார நிலையங்களுக்கு எச்சரிக்கை அறிவுறுத்தல்கள் மேற் கொள்ளப்பட்டமையுடன் மேலும் பல வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்கும் தொடரப்பட்டது.

## மட்டக்களப்பு

## பாசிக்குடாவில் நேற்று விபத்து

மட்டக்களப்பு வாழைச்சேனை பாசிக்குடா வீதியில் நேற்று மாலை 5.30 மணி அளவில்இடம்பெற்ற வாகன விபத்தில் பசுமாடு ஒன்று சம்பவ இடத்திலேயே உயிர் இழந்துள்ளது.

அதிவேகத்தில் வந்த தனியார் கார் ஒன்று தனது வேகக்கட்டுப்பாட்டை இழந்து பசுமாட்டுடன் மோதி குறித்த விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்து தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# புதிய ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர் இலங்கைக் கிரிக்கெட் அணி வீரர்கள்




இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களுக்கான புதிய ஊதிய ஒப்பந்தத்தில் திறமை, உடல்தகுதி, தலைமைப் பண்பு, நடத்தை உள்பட பல்வேறு அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு வீரர்கள் 4 பிரிவாக தரம் பிரிக்கப்பட்டு சம்பளம் நிர்ணயம் செய்யப்படும் என்று இலங்கை கிரிக்கெட் நிர்வாகம் அறிவித்திருந்தது.

இந்த நிபந்தனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்த இலங்கை வீரர்கள் புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட கடந்த 3 மாதங்களுக்கு மேலாக மறுத்து வந்தனர். இந்த நிலையில் சமரசப் பேச்சுக்குப் பிறகு இலங்கை வீரர்கள் புதிய ஒப்பந்தத்துக்கு சம்மதித்துள்ளனர்.

இதன்படி இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தின் தொழில்நுட்ப குழுவால் உருவாக்கப்பட்ட நிபந்தனைகளுடன் கூடிய ஒப்பந்தத்தில் தனஞ்ஜெயா டி சில்வா, குசல் பெரேரா, கருணாரத்ன, சுரங்க லக்மால், சந்திமால் உள்பட 18 வீரர்கள் கையெழுத்திட்டிருக்கிறார்கள்.

ஓகஸ்ட் முதலாம் திகதியிலிருந்து அமுல்படுத்தப்பட்டிருக்கும் இந்தப் புதிய ஒப்பந்தம் டிசெம்பர் 31 வரையிலான 5 மாத காலத்துக்குரியதாகும் என இலங்கை கிரிக்கெட் நிர்வாகம் நேற்று அறிவித்தது. புதிய ஒப்பந்தத்தில் முன்னாள் கப்டன் அஞ்சலோ மத்யூஸும் சமீபத்தில் நடந்த இங்கிலாந்துத் தொடரில் கொரோனா நடத்தை விதிமுறைகளை மீறியதால் ஓராண்டுத் தடை விதிக்கப்பட்டுள்ள குணதிலக, குசல்மென்டிஸ், டிக்வெல ஆகியோரது பெயர்கள் இடம்பெறவில்லை.

## ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி நிச்சயம் தொடர்ந்து விளையாடும்



ஆப்கானிஸ்தான் நாடு மீண்டும் இஸ்லாமிய மத அடிப்படைவாத இயக்கமான தலிபான் கைகளில் சென்றுள்ளது. தலிபான்கள் ஆட்சியில் பல்வேறு விடயங்களுக்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்படும். ஆப்கான் நாட்டின் நிலை குறித்து அந்த நாட்டு கிரிக்கெட் வீரர்கள் ரஷீட் கானும், மொஹமட் நபியும் தங்களது கவலைகளை சமூக வலைத்தளங்களில் தெரிவித்திருந்தனர்.


இந்தநிலையில் ஆப்கான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஹமீத் ஷின்வாரி, பாகிஸ்தானுடனான கிரிக்கெட் தொடரிலும், ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரிலும் நிச்சயம் ஆப்கான் அணி பங்கேற்கும். அதில் எந்தவித மாற்றமும் இல்லை. நாங்கள் பி.சி.சி.ஐ. மற்றும் ஐ.சி.சியுடன் தொடர்ந்து தொடர்பில் இருந்து வருகிறோம். அவர்களும் ஆப்கான் நிலை குறித்து தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். அதனால், கிரிக்கெட் விளையாடுவதில் இப்போதைக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்றார்.

மேலும் பேசிய அவர், தலிபான்களுக்கு கிரிக்கெட் மீது எந்தக் கட்டுப்பாட்டு எண்ணங்களும் இல்லை என்றே நினைக்கிறேன். முன்பு அவர்கள் ஆட்சியில் இருந்தபோதும் கூட கிரிக்கெட்டை அவர்கள் தொந்தரவு செய்யவில்லை. கிரிக்கெட் விளையாடக்கூடாது என்று அவர்கள் கட்டுப்பாடுகள் விதித்ததில்லை. அவர்களால் விளையாட்டுக்குப் பாதிப்பு ஏற்பட்ட சம்பவங்கள் முன்னர் கூட நடந்ததில்லை என்றும் ஹமீத் ஷின்வாரி குறிப்பிட்டிருக்கிறார்.










## ஐ.பி.எல். தொடரில் விளையாட இரு இலங்கை வீரர்கள் ஒப்பந்தம்

இந்த வருடத்துக்கான ஐ.பி.எல். ரி-20 தொடரின் இரண்டாம் பகுதியில் விளையாடுவதற்கு இலங்கை வீரர்களான வனிந்து ஹசரங்க மற்றும் துஷ்மந்த சமீர ஆகியோர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

இதுவரை ஐ.பி.எல். கிண்ணத்தை வெல்லாத ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்காக இவர்கள் இருவரும் விளையாட உள்ளமையை பெங்களூர் அணி நிர்வாகம் உறுதிசெய்துள்ளது.

வனிந்து ஹசரங்க, ஆஸ்திரேலிய அணியின் சுழல்பந்து வீச்சாளர் அடம் சம்பாவுக்கு மாற்றீடாக விளையாடவுள்ளார்.

சுழற்பந்து வீசுகின்ற சகலதுறை வீரரான வனிந்து ஹசரங்க சமீபகாலமாக பந்து வீச்சில் சிறப்பாக செயற்பட்டு ரி-20 தரவரிசையில் இரண்டாவது இடத்தைப் பிடித்திருக்கிறார். வேகப்பந்து வீச்சாளரான துஷ்மந்த சமீர ஏற்கனவே ஐ.பி.எல்லில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்காக இணைத்துக்கொள்ளப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## முழங்கால் சத்திரசிகிச்சைக்குப் பின்னர் ஐ.பி.எல்லில் விளையாடுகிறார் நடராஜன்

காலில் மேற்கொள்ளப்பட்ட அறுவைச் சிகிச்சைக்கு பின்பு பயிற்சியில் ஈடுபட்டு வந்த தமிழக வீரர் நடராஜன் விரைவில் ஹைதராபாத் அணியுடன் இணைந்து ஐ.பி.எல். தொடரில் விளையாட இருக்கிறார் எனத் தகவல் வெளியாகி இருக்கிறது.

கடந்தாண்டு ஐ.பி.எல். மற்றும் ஆஸ்திரேலிய தொடர்கள் நடராஜனுக்கு சிறப்பாகவே அமைந்தன. ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட நடராஜன் ரி-20, ஒருநாள் மற்றும் டெஸ்ட் என அனைத்து தொடர்களிலும் அறிமுகமாகி விளையாடி அசத்தினார். அதன்பின்பு ஐ.பி.எல். தொடரில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிக்காக விளையாடிய நடராஜன், கால் மூட்டில் ஏற்பட்ட காயம் காரணமாக பாதிக்கப்பட்டார்.

இதனால் ஐ.பி.எல். தொடரில் இருந்து விலகிய அவர், சத்திர சிகிச்சை மேற்கொண்டார். அதன்பின்னர் பெங்களூருவில் இருக்கும் தேசிய கிரிக்கெட் அகாடமியில் மருத்துவர்களின் கண்காணிப்பில் தன்னுடைய பயிற்சிகளை மேற்கொண்டு வந்தார் நடராஜன். சில மாதங்களுக்கு முன்பு அவர் அளித்த பேட்டியில் ஐ.பி.எல். மீதிப் போட்டிகளில் விளையாடும் நோக்கோடு பயிற்சி எடுத்து வருவதாகக் கூறியிருந்தார்.

இம்மாதம் 31 ஆம் திகதி சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி ஐ.பி.எல். தொடருக்காக ஐக்கிய அரபு இராச்சியத்துக்குப் புறப்படவிருக்கிறது. அந்தக் குழுவில் நடராஜனும் இணைக்கப்பட்டுள்ளர் என அந்த அணியின் உயர் அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார். இதனால், காயத்தில் இருந்து மீண்டுள்ள நடராஜன் ஐ.பி.எல்லில் விளையாடுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.




## ஆபத்தான கட்டத்தைத் தாண்டினார் முன்னாள் கிரிக்கெட் வீரர் கிறிஸ் கெய்ர்ன்ஸ்

இதயப் பகுதியில் ஏற்பட்ட பாதிப்புக் காரணமாக ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் கிறிஸ் கெய்ர்ன்ஸ்க்கு ஆபத்தின் அளவு குறைந்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. எனவே, உயிர் காக்கும் கருவிகள் அகற்றப்பட்டு, அவர் உடல் நலம் தேறிவருவதாகவும் கூறப்படுகிறது.

51 வயதான கிறிஸ் கெய்ர்ன்ஸ் ஆஸ்திரேலியாவின் கான்பெரா நகரில் இருந்தபோது உடல்நலம் பாதிக்கப்பட்டார். அவருக்கு இதயப் பகுதியில் பாதிப்பு ஏற்பட்டது. அதற்காக சத்திரசிகிச்சை செய்யப்பட்டபோதும் அவரது உடல்நிலை அதற்கு ஒத்துழைப்புக் கொடுக்க மறுப்பதாக நியூசிலாந்து ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. அவரை சிட்னிக்கு இடம் மாற்றி சிகிச்சை கொடுக்கவும் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அங்கே அவருக்கு உயிர் காக்கும் கருவிகள் பொருத்தப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் சிட்னி மருத்துவமனை வெளியிட்டுள்ள அறிக்கையில், கிறிஸ் கெய்ன்ஸ் உயிர்காக்கும் கருவிகளிலிருந்து விடுதலை பெற்றார் என்றும் உடல் நிலை தேறி தன் குடும்பத்தினருடம் உரையாடினார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. கிறிஸ் கெய்ர்ன்ஸ் ஆபத்தான கட்டத்தைத் தாண்டியுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்து அணிக்காக 62 டெஸ்ட், 215 ஒருநாள் போட்டிகள் மற்றும் இரண்டு ரி-20 போட்டிகளிலும் கிறிஸ் கெய்ர்ன்ஸ் விளையாடியுள்ளார். கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் தொலைக்காட்சிகளில் கிரிக்கெட் வர்ணணையாளராக கிறிஸ் கெய்ர்ன்ஸ் செயல்பட்டுவந்தார்.

# வர்த்தக நிலையங்களை மூடுவதால் எவ்விதப் பயனும் கிடைக்கமாட்டாது

## இராணுவத் தளபதி கூறுகிறார்



வர்த்தக நிலையங்களை சுயமாக மூடுவதால் எவ்விதப் பயனும் கிடையாது என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தற்போதைய சூழ்நிலைமை உணர்ந்து வர்த்தகர்கள், தங்களது வர்த்தக நிலையங்களை சுயமாக மூடியுள்ளமை வரவேற்கத்தக்கது. ஆனால் சாதாரண மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்படுவது அவசியமாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதாவது, வர்த்தக நிலையங்களை மூடியுள்ளமையால் ஒரு சில இடங்களில், நுகர்வோர் பொருள்களை கொள்வனவு செய்வதற்காக வேறு பகுதிகளில் உள்ள நகரங்களுக்கு செல்கிறார்கள். ஆகவே வர்த்தக நிலையங்களை சுயமாக மூடுவதால் எவ்விதப் பயனும் கிடையாது என சவேந்திர சில்வா குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த நாட்டு மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். புதிய சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டலில் அடிப்படையில் பொதுமக்கள் செயற்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதாவது, வீட்டிலிருந்து ஒருவர் மாத்திரம் வெளியில் செல்ல முடியும். எனினும் தொழில் மற்றும் அத்தியாவசியசேவைக்காகவெளியில் செல்லும்போது ஒருவர் என்ற அறிவுறுத்தல் தாக்கம் செலுத்தாது என சவேந்திர சில்வா குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டை இரு வாரம் முடக்குவதால் பொருளாதாரம் சரிவடையமாட்டாது

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு



நாட்டை இரண்டு வாரங்கள் முடக்குவதால் பொருளாதாரம் முழுவதும் சரிவடைந்து விடப் போவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் ஏற்பட்டுள்ள நிலைமைகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது ஹர்ஷ டி சில்வா மேலும் கூறியுள்ளவை வருமாறு –

சுதந்திரத்துக்குப் பின்னர் நாடு பாரியபொருளாதாரநெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

குறுகிய காலத்தில் நாம் பாரிய சவாலை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல் நிலைமையை மறைப்பதற்காக வேறு செயற்பாடுகளை முன்னெடுப்பதால் மக்களே பாதிக்கப்படுவர்.

மேலும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாட்டின் பொருளாதாரம் ஒரே தடவையில் திடீரென வீழ்ச்சியடையாது. அத்துடன் அளவுக்கு அதிகமாக நாணயத்தாள்களை தொடர்ச்சியாக அச்சிடுவதால் பணவீக்கம் உயர்வடையும். இதனால் பொருள்களின் விலையும் அதிகரிக்கும். இதிலும் மக்களே பாதிக்கப்படுவர்.

ஆகவே, இந்த விடயங்களில் உலக நாடுகள் எவ்வாறு செயற்படுகின்றன என்பதை அவதானித்து, அதிலிருந்து அனுபவங்களைப் பெற்று மக்களைப் பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தலிபான்களின் ஆட்சியை ஏற்றால் மீண்டும் பயங்கரவாதம் ஏற்படும்

## ரணில் எச்சரிக்கை



பாமியன் புத்தர் சிலையை அழித்த தலிபான்களின் ஆட்சியை ஒருபோதும் ஏற்க முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தலிபான்களின் ஆட்சி குறித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எனவே காபூலிலுள்ள இலங்கை தூதரகத்தை அங்கிருந்து உடனடியாக நீக்க வேண்டும். மத்திய ஆசியாவிற்கான இலங்கையின் தூதரகத்தை மற்றுமொரு நாட்டில் ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் அதிகாரத்தை கைப்பற்றியுள்ளமையானது ஜிஹாத் உள்ளிட்ட பயங்கரவாதக் குழுக்களின் தளமாக ஆப்கான் மாறலாம் என்ற சந்தேகம் அனைவருக்கும் ஏற்பட்டுள்ளது. ஆகவே இதனை நினைவில் வைத்து செயற்பட வேண்டும் என ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

மேலும், நாட்டின் எதிர்காலம் குறித்து சிந்தித்து அரசாங்கம் தலிபான்களை ஆட்சியை ஏற்காது செயற்பட வேண்டும். மீண்டும் தலிபான்களின் ஆட்சி ஊடாக ஏற்படக் கூடிய அச்சுறுத்தல்கள் தொடர்பாக கவனத்தில் கொண்டு தீர்மானங்களை அரசாங்கம் எடுக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இல்லாவிடின், மாறாக பாமியன் புத்தர் சிலையை அழித்த தலிபான்களை அனுமதித்தால், பிராந்தியத்தில் இல்லாமலாக்கப்பட்ட பயங்கரவாதம் மீண்டும் ஏற்படும் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும் என ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தில் 75 சதவீதத்தை மக்களுக்கு வழங்குங்கள்

## அமைச்சர் பிரசன்ன ஆலோசனை



முடக்கநிலையின்போது கடுமையான சிரமங்களை எதிர்கொள்ளும், மாதாந்த சம்பளம் பெறாத குடும்பத்தினருக்கு, ஊதியத்தில் ஒரு சதவீதப் பகுதியை நன்கொடையாக வழங்கும் யோசனையொன்றை சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க முன்வைத்துள்ளார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இந்த யோசனையைக் குறிப்பிட்டுள்ளார்.

இதில், தாம் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தில் 75 வீதம், அரச மற்றும் தனியார் ஊழியர்களின் சம்பளத்தில் 50 வீதம் மற்றும் சிறு தொழிலாளர்களின் சம்பளத்தில் 30 வீதத்தை நன்கொடையாக வழங்க வேண்டும் எனக் கூறியுள்ளார். அத்துடன் தொற்று நிலைமையை முன்வைத்து, நாட்டு மக்களின் மன உறுதியை வீழ்த்தும் திட்டத்தை எதிர்க்கட்சிகள் செயற்படுத்தி வருகின்றன எனவும் குற்றஞ்சாட்டினார்.

# பொருள்களின் விலையேற்றத்தைக் கண்டித்து வலி.தென்மேற்கு பிரதேசசபையில் கவனவீர்ப்பு

*யாழ்ப்பாணம்- வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று (வெள்ளிக்கிழமை) சபையின் தவிசாளர் அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன் தலைமையில் பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.*

*இதன்போது சமையல் எரிவாயு, பால் மா மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தையும் தட்டுப்பாட்டையும் கண்டித்து சபை மண்டபத்தில் கவனவீர்ப்பு இடம்பெற்றது.*

*சமையல் எரிவாயு, பால் மா போன்றவற்றையும் சபை உறுப்பினர்கள் சபைக்கு கொண்டு வந்திருந்த அதேவேளை பதாதைகளையும் சபை உறுப்பினர்கள் கையில் ஏந்தியிருந்தனர்.*

*இன்றைய அமர்வின்போது நாடு முடக்கப்படுமானால் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு பிரதேச சபையின் சுமார் 50 லட்சம் ரூபா பெறுமதியான நிதியை மக்களின் அத்தியாவசிய தேவைகளுக்கு பயன்படுத்த அனுமதிக்கவேண்டும் என்ற பிரேரணை ஒன்றும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு, பிரேரணை ஆளுநரின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.*

*கடந்த அமர்வின்போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர் ஒருவர், தனிமைப்படுத்தல் காரணமாக சபை அமர்வில் பங்குபற்றாத உறுப்பினர்கள் சிலர் தொடர்பாக தெரிவிக்கப்பட்ட கருத்து தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் மற்றும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சி உறுப்பினர் இடையே கடும் விவாதம் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.*

# கொரோனாத் தொற்று மற்றும் இறப்புக்கள்; புள்ளிவிவர தரவுகளில் சில முரண்பாடுகள்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஏற்றுக்கொள்கிறார்



கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானோர்கள் மற்றும் இறப்புகள் தொடர்பாக வெளியிடப்பட்ட புள்ளிவிவர தரவுகளில் சில முரண்பாடுகள் இருக்கின்றன என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

தொற்று நோயியல் பிரிவினால் வெளியிடப்பட்ட புள்ளிவிவர தரவுகளில், கம்பஹா மாவட்டத்திலும், கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் உள்ள சில மாவட்டங்களில் சில முரண்பாடுகள் இருக்கின்றன என அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இவற்றை முடிந்த வரை விரைவாக சரி செய்து, சரியான புள்ளி விவர தரவுகளைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டில் இதுவரை ஒரு கோடியே 29 லட்சத்து 19 ஆயிரத்து 193 பேருக்கு கொவிட் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளது. அதேபோல 51 லட்சத்து 24 ஆயிரத்து 185 பேருக்கு கொவிட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளது.

# முடங்கின நகரங்கள்



## கிளிநொச்சி முற்றாக முடக்கம்

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைதியான நிலை தற்பொழுது காணப்படுகிறது. போக்குவரத்து மிக குறைவாக காணப்படுவதுடன், அத்தியாவசிய தேவைகள் மாத்திரம் இடம்பெறுகின்றன. வீதி சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு தேவையற்ற நடமாட்டங்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. ஏ 9 வீதியுடன் இணையும் வீதிகள் அனைத்திலும் படையினர் நிறுத்தப்பட்டு நடமாட்டத்தை கட்டுப்படுத்தி வருகின்றனர்.




## வவுனியா முற்றாக முடக்கம்



நாடளாவிய ரீதியில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச்சட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ள நிலையில் வவுனியா மாவட்டத்தின் இயல்பு வாழ்க்கை முழுமையாக முடங்கியது.இந்த நிலையில் வவுனியாவில் அனைத்து வியாபார நிலையங்களும் மூடப்பட்டுள்ளதுடன், தனியார் மருத்துவமனைகள் மற்றும் ஒருசில மருந்தகங்கள் திறக்கப்பட்டுள்ளன.


இதேவேளை ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டமையால் மரக்கறி வியாபாரிகள்பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்துள்ளமையுடன், மரக்கறி வகைகள் பழுதடையும் நிலையும் ஏற்பட்டுள்ளது.



## 3 ஆவது அலையில் முடங்கியது யாழ்ப்பாணம்

கொரோனாப் பரவல் இலங்கையின் வடக்கில் அதிகரித்துள்ள நிலையில் அரசின் 10 நாள் முடக்கத்துக்கு யாழ்ப்பாண நகரம் முழுவதுமாக முடங்கிய காட்சிகள்.





## ஈ, காகம் கூட இல்லாமல் முற்றாக முடங்கிய கொழும்பு மாநகரம்

கொரோனாத் தொற்றில் 3 ஆவது அலையின் மிகப்பெரும் அவலத்தில் 10 நாள்கள் முடக்கப்பட்ட நிலையில் கொழும்பு நகரம் முற்றாக முடங்கியது .





## கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு - அம்பாறை முழுமையாக ஸ்தம்பிதம்

கிழக்கில் அதிகப்படியான கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்படும் நிலையில் இன்று கிழக்கு முழுவதும் முடங்கிய நிலையில் உள்ள படங்கள் . அத்தியாவசிய சேவைகளை தவிர வேறு எதற்காகவும் பொதுப்போக்குவரத்து இடம்பெறாது என இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.



## முடக்க நிலையிலும் வவுனியாவில் பி.சி.ஆர். சோதனை

வவுனியா நகரின் முக்கிய பகுதிகளில் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பொலிஸாரின் ஏற்பாட்டில் இன்று காலை பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஏ9வீதி நீதிமன்றத்திற்கு அருகாமையில் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் 2 பேருக்கு தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டது.



## முடங்கியது திருகோணமலை

திருகோணமலை நகர்ப் பகுதி அனைத்துக் கடைகளும் மூடப்பட்டுள்ளன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.08.2021இல் வளியிடப்பெற்றது.